सत्यमेव जयते

भारत का राजपत्र

# The Gazette of India

# இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

சிறப்பிதழ்

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्रधिकार प्राकाशित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது.

---

नई दिल्ली, सोमवार, 23 नवंबर, 1992/1914 शक

New Delhi, Monday, 23rd November 1992

*புது தில்லி, 1992ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 23ஆம் தேதி, திங்கட்கிழமை*

---

**Ministry of Law, Justice and Company Affairs**

(Law Department)

New Delhi, the 23rd November 1992

*சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்*

*(சட்டத்துறை)*

*புது தில்லி, 23, நவம்பர் 1992*

The translation in Tamil of the Scheduled Castes and Scheduled Tribes (Prevention of Atrocities) Act, 1989 (33 of 1989), The All-India Services Act, 1951 (61 of 1951), The Dowri Prohibition Act, 1961 (28 of 1961), The explosive Substances Act, 1908 (6 of 1908), The President (Discharge of Functions) Act, 1969 (16 of 1969), The Government Savings Certificates Act, 1959 (46 of 1959), The Weekly Holidays Act, 1942 (18 of 1942) and The Hindu Adoptions and Maintenance Act, 1956 (78 of 1956) are hereby published under the authority of the President and shall be deemed to be the authorised translations thereof in Tamil under clause (*a*) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

*பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பட்டியலில் கண்ட பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்புச்) சட்டம், 1989 (33/1989), அனைத்திந்தியப் பணிகள் சட்டம், 1951 - (61/1951), மணக்கொடைத் தடுப்புச் சட்டம், 1961 (28/1961), வெடிபொருள்கள் சட்டம், 1908 (6/1908), குடியரசுத் தலைவர் (பதவிப் பணிகளை ஆற்றுதல்) சட்டம், 1969 (16/1969), அரசாங்கச் சேமிப்பு பத்திரங்கள் சட்டம், 1959 (46/1959), வார விடுமுறை நாட்கள் சட்டம், 1942 (18/1942) மற்றும் இந்து மகவேற்புகள் மற்றும் வாழ்க்கைப் பொருளுதவிச் சட்டம், 1956 (78/1956) ஆகியவற்றின் தமிழாக்கங்கள் குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன் மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973)இன் பிரிவு 2இன் கூறு (அ)-வின் கீழ் இவையே தமிழில் அதிகாரமுறை மொழிபெயர்ப்புகளாகக் கருதப்படுதல் வேண்டும்.*

# மணக்கொடைத் தடுப்புச் சட்டம் 1961

(சட்ட எண் 28/1961)

[1961, மே 20]

மணக்கொடை கொடுப்பதை அல்லது ஏற்றுக்கொள்வதைத் தடுப்பதற்கான சட்டம்.

இந்தியக் குடியரசின் பன்னிரண்டாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின் வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக :—

குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், மணக்கொடைத் தடுப்புச் சட்டம், 1961 என்று வழங்கப்பெறும்.

(2) இது, ஜம்மு-காஷ்மீர் மாநிலம் நீங்கலாக இந்தியா முழுவதையும் அளாவிநிற்கும்.

(3) இது, மைய அரசாங்கம் அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடும் தேதியன்று செல்லாற்றல் பெறும்.

"மணக்கொடை என்பதன் பொருள் வரையறை."

2. இந்தச் சட்டத்தில் '' மணக்கொடை '' என்பது,—

(அ) திருமணத்திற்குற்ற தரப்பினர்களில் ஒரு தரப்பினர் பிற தரப்பினருக்கு, அல்லது

(ஆ) திருமணத்திற்குற்ற இரு தரப்பினர்களில் ஒரு தரப்பினரின் பெற்றோர்களால், அல்லது பிறர் எவராலும், அந்தத் திருமணத்திற்குற்ற இருதரப்பினர்களில் ஒரு தரப்பினருக்கு அல்லது பிறர் எவருக்கும்,

மேற்சொன்ன தரப்பினர்களின் திருமணத்தின் தொடர்பாக அத்திருமணத்தின்போது அல்லது அதற்கு முன்பு அல்லது அதற்குப் பின்பு எப்போதாவது, நேரடியாகவோ நேரடியாகயின்றியோ கொடுக்கப்பட்ட அல்லது கொடுக்க உடன்பட்ட சொத்து அல்லது மதிப்புறு ஆவணம் எதுவும் என்று பொருள்படும்; ஆனால், முஸ்லீம் இனமுறைச் சட்டம் (ஷரியட்) பொருந்துறுகிறவர்களைப் பொறுத்தவரை, மணச்சீர், ''மஹர்'' ஆகியவற்றை உள்ளடக்காது.

விளக்கம் I.—[சட்டம் 63/1984–இனால் 2–10–1985 முதற் கொண்டு செல்திறம் பெறுமாறு விட்டுவிடப்பட்டது.].

விளக்கம் II.—''மதிப்புறு ஆவணம்'' என்னும் சொற்றொடர், இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் (45/1860) 30ஆம் பிரிவில் உள்ளது போன்ற அதேபொருளைக் கொண்டிருக்கும்.

மணக்கொடை கொடுத்தல், ஏற்றல் ஆகிய வற்றிற்குற்ற தண்டனை.

3. (1) இந்தச் சட்டத்தின் தொடக்க நிலைக்குப் பின்பு ஒருவர் மணக்கொடையைக் கொடுப்பாராயின் அல்லது ஏற்றுகொள்வாராயின் அல்லது கொடுப்பதற்கோ ஏற்றுக்கொள்வதற்கோ உடந்தையாக இருப்பாராயின், அவர் ஐந்தாண்டுகளுக்குக் குறையாத ஒரு கால அளவுக்குச் சிறைத்தண்டனையும், பதினையாயிரம் ரூபாய் அல்லது அத்தகைய மணக்கொடையின் பெறுமானத்தொகை இவற்றில் எது அதிகமானதாகவுள்ளதோ அதற்குக் குறையாத அளவுக்குப் பணத்தண்டமும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்:

வரம்புரையாக : நீதிமன்றம், போதிய தனிக் காரணங்களைத் தீர்ப்புரையில் குறிப்பிட்டு, ஐந்தாண்டுகளுக்குக் குறைவானதொரு கால அளவுக்குச் சிறைத் தண்டனையை விதிக்கலாம்.

(3). (1)ஆம் உட்பிரிவிலுள்ள எதுவும் பின் கண்டவற்றிற்கோ, அவை தொடர்பானவற்றிற்கோ பெர்ருந்துறுதல் ஆகாது—

(அ) ஒரு திருமணத்தின்போது, மணமகளுக்கு (அதன்பொருட்டு கோரிக்கை எதுவும் செய்யப்படாமலேயே) அளிக்கப்படும் அன்பளிப்புகள் :

வரம்புரையாக: அத்தகைய அன்பளிப்புகள், இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதிகளுக்கு இணங்கியவாறு வைத்துவரப்படும் ஒரு பட்டியலில் பதியப்படுதல் வேண்டும்.

(ஆ) ஒரு திருமணத்தின்போது, மணமகனுக்கு (அதன்பொருட்டு கோரிக்கை எதுவும் செய்யப்படாமலேயே) அளிக்கப்படும் அன்பளிப்புகள் :

வரம்புரையாக: அத்தகைய அன்பளிப்புகள் இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதிகளுக்கு இணங்கியவாறு வைத்துவரப்படும் ஒரு பட்டியலில் பதியப்படுதல் வேண்டும் :

மேலும் வரம்புரையாக : மணமகளால் அல்லது அவள் சார்பாக, அல்லது மணமகளுக்கு உறவினராகவுள்ள ஒருவரால் அத்தகைய அன்பளிப்புகள் அளிக்கப் படுகிறவிடத்து, அத்தகைய அன்பளிப்புகள் வழக்காற்று முறையில் அளிக்கப்பட்டன வாக இருப்பதுடன், அவை எவரால் அல்லது எவர் சார்பாக அளிக்கப்படுகின் றனவோ அவருடைய செல்வநிலையைப் பொறுத்து, அவற்றின் பெறுமதி மிகை யானது என்று இல்லாமல் இருத்தலும் வேண்டும்.

மணக்கொடை கோரினால் தண்டனை.

4. ஒருவர், மணமகளின் அல்லது மணமகனின் பெற்றோர்களிடமிருந்து அல்லது பிற உறவினர்களிடமிருந்து அல்லது காப்பாளரிடமிருந்து, நேரடியாகவோ, நேரடியாகயின்றியோ மணக்கொடை எதனையும் கோருவாராயின், அவர், ஈராண்டுகள் வரை நீடிக்கலாகும். ஆனால் ஆறு மாதங்களுக்குக் குறையாத ஒரு கால அளவுக்குச் சிறைத் தண்டனையும், பத்தாயிரம் ரூபாய் வரை பணத் தண்டமும் விதித்துத் தண்டிக்கப்படத் தக்கவர் ஆவார் :

வரம்புரையாக : நீதிமன்றம், போதிய தனிக் காரணங்களைத் தீர்ப்புரையில் குறிப்பிட்டு, ஆறு மாதங்களுக்குக் குறைவானதொரு காலஅளவுக்குச் சிறைத் தண்டனை விதிக்கலாம்.

விளம்பரத் திற்குத் தடை.

4அ. ஒருவர்—

(அ) செய்தித்தாள், குறித்தகால வெளியீடு, முறை இதழ் இவற்றில் எதிலும் செய்யப்படும் விளம்பரம் ஒன்றின் வழியாகவோ பிற சாதனம் எதன் வழியாகவோ, தம் மகளின் அல்லது மகனின் அல்லது பிற உறவினரொருவரின் திருமணத்திற்குற்ற மறுபயனாக, அவர் சொத்தின் ஒருபங்கையோ, பணத்தையோ அல்லது இரண்டையுமோ அல்லது ஒரு வாணிபத்தில் அல்லது வேறுவகைப் பாத்தியத்தில் ஒரு பங்கையோ அளிக்க முன்னுறுவாராயின்,

(ஆ) கூறு (அ)-வில் சுட்டப்பட்டுள்ள விளம்பரம் எதனையும் அச்சடிப் பாராயின் அல்லது வெளியிடுவாராயின் அல்லது விநியோகிப்பா ராயின்

அவர் ஐந்தாண்டுகள் வரை நீடிக்கலாகும் ஆனால் ஆறு மாதங்களுக்குக் குறையாத ஒரு கால அளவுக்குச் சிறைத் தண்டனையோ, பதினையாயிரம் ரூபாய் வரை பணத்தண்டமோ விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார் :

வரம்புரையாக : நீதிமன்றம், போதிய தனிக் காரணங்களைத் தீர்ப்புரையில் குறிப்பெழுதி ஆறு மாதங்களுக்கும் குறைவான ஒரு கால அளவுக்குச் சிறைத் தண்டனையை விதிக்கலாம்.

மணக்கொடை கொடுப்பதற்கு அல்லது ஏற்றுக் கொள்வதற்கான உடன்பாடு எதுவும் இல்லா நிலை யது ஆதல்.

5. மணக்கொடையைக் கொடுப்பதற்கான அல்லது ஏற்றுக்கொள்வதற்கான உடன்பாடு எதுவும் இல்லா நிலையது ஆகும்.

மணக்கொடை, மனைவியின் அல்லது அவரது வாரிசுகளின் நலப்பயனுக் காக இருக்க வேண்டும்.

6. (1) ஒரு பெண்ணின் திருமணம் தொடர்பாக அளிக்கப்படும் மணக் கொடை அந்தப் பெண் அல்லாத பிற எவராலேனும் பெற்றுக்கொள்ளப்படுமிடத்து அவர்—

(அ) அந்த மணக்கொடை, அத்திருமணத்திற்கு முன்பு பெற்றுக் கொள்ளப்பட்டதாயின், அந்தத் திருமணத் தேதிக்குப் பின்பு மூன்று மாதங்களுக்குள், அல்லது

(ஆ) அந்த மணக்கொடை, அத்திருமணத்தின்போதோ, அத்திரு மணத்திற்குப் பின்போ பெற்றுக்கொள்ளப்பட்டதாயின், அது பெற்றுக்கொள்ளப்பட்ட தேதிக்குப் பின்பு மூன்று மாதங்களுக்குள், அல்லது

(இ) அந்த மணக்கொடை, அந்தப் பெண் ஓர் உரிமை வயதடையாத வராக இருந்தபோது பெற்றுக்கொள்ளப்பட்டதாயின், அந்தப் பெண் பதினெட்டு வயது நிறைவெய்திய பின்பு ஓராண்டுக்குள்

அந்தப் பெண்ணுக்கு அதை உரிமை மாற்றம் செய்தல் வேண்டும் ; மேலும், அத்தகைய உரிமை மாற்றம் செய்யப்படும் வரையில், அவர் அதை அந்தப் பெண்ணின் நலப்பயனுக்காகத் தம் நம்பிக்கைப் பொறுப்பில் வைத்திருத்தல் வேண்டும்.

(2). உட்பிரிவு (1)இல் வேண்டுறுத்தப்பட்டுள்ளவாறு குறித்துரைக்கப்பட்ட காலவரம்புக்குள் அல்லது உட்பிரிவு(3) இதனால் வேண்டுறுத்தப்பட்டுள்ளவாறு சொத்து எதனையும் ஒருவர் உரிமைமாற்றம் செய்யத் தவறுவாராயின் அவர், ஈராண்டுகள் வரை நீடிக்கலாகும் ஆனால் ஆறு மாதங்களுக்குக் குறையாத, ஒரு காலஅளவுக்குச் சிறைத்தண்டனையோ, ஐயாயிரம் ரூபாய்க்குக் குறையாததும் பத்தாயிரம் ரூபாய்க்கு மேற்படாததுமான பணத்தண்டமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படத் தக்கவர் ஆவார்.

(3). உட்பிரிவு (1)இன்படி சொத்து எதற்கும் உரிமை கொண்ட பெண், அதைப் பெறுவதற்குமுன் இறந்துவிட்டால், அந்தப் பெண்ணின் வாரிசுகள் அப்போதைக்கு அதை வைத்திருப்பவரிடமிருந்து கோரிப் பெறுவதற்கு உரிமை கொண்டவர் ஆவர்;

வரம்புரையாக: அத்தகைய பெண், தன் திருமணத்திலிருந்து ஏழாண்டுகளுக்குள் இயற்கையான காரணங்களாலன்றி வேறுவகையில் இறந்துவிட்டால், அத்தகைய சொத்து—

(அ) அவருக்குக் குழந்தைகள் இல்லை என்றால், அவருடைய பெற்றோருக்கு உரிமைமாற்றம் செய்யப்படுதல் வேண்டும்; அல்லது

(ஆ) அவருக்குக் குழந்தைகள் இருந்தால், அத்தகைய குழந்தைகளுக்கு உரிமை மாற்றம் செய்யப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய உரிமைமாற்றம் செய்யப்படும் வரையில், அந்தக் குழந்தைகளுக்காக அச்சொத்துக்கள் நம்பிக்கைப் பொறுப்பில் வைக்கப்படுதல் வேண்டும்.

(3அ) உட்பிரிவு (1)இனால் அல்லது உட்பிரிவு (3)இனால் வேண்டுறுத்தப்பட்டவாறு சொத்து எதனையும் உரிமைமாற்றம் செய்வதற்குத் தவறியதற்காக உட்பிரிவு (2)இன்படி குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்ட ஒருவர், அந்த உட்பிரிவின்படி அக் குற்றத் தீர்ப்புக்கு முன்பு, அத்தகைய சொத்தினை, நேர்வுக்கேற்ப, அதற்கு உரிமைகொண்ட பெண்ணுக்கு, அவருடைய வாரிசுகளுக்கு, பெற்றோர்களுக்கு அல்லது குழந்தைகளுக்கு உரிமைமாற்றம் செய்திராதவிடத்து நீதிமன்றம், அந்த உட்பிரிவின்படி தண்டனை வழங்குவதுடன் எழுத்துவடிவிலான ஆணை வாயிலாக, அத்தகையவர், அந்தச் சொத்தினை, நேர்வுக்கேற்ப, அத்தகைய பெண்ணுக்கு அல்லது அவருடைய வாரிசுகளுக்கு, பெற்றோர்களுக்கு அல்லது குழந்தைகளுக்கு, அந்த ஆணையில் குறித்துரைக்கப்படும் கால அளவிற்குள் உரிமை மாற்றம் செய்தல் வேண்டும் எனப் பணித்தல் வேண்டும்; மேலும், அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட கால அளவிற்குள் அந்தப் பணிப்புரைக்கு இணங்கி நடக்க அத்தகையவர் தவறுவாராயின், அந்தச் சொத்தின் பெறுமானத்தொகை, அது அத்தகைய நீதிமன்றத்தால் சுமத்தப்பட்ட ஒரு பணத்தண்டத்தைப் போன்று அவரிடமிருந்து வசூல்செய்யப்பட்டு, அத்தகைய பெண்ணுக்கு அல்லது நேர்வுக்கேற்ப, அவருடைய வாரிசுகளுக்கு, பெற்றோர்களுக்கு அல்லது குழந்தைகளுக்கு அளிக்கப்படுதல் வேண்டும்.

(4) இந்தப் பிரிவில் அடங்கியுள்ள எதுவும், பிரிவு 3இன் அல்லது பிரிவு 4இன் வகையங்களைப் பாதிப்பதில்லை.

**குற்றச் செயல்கள் மீதான வழக்கேற்பு.**

7. (1) குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973 (2/1974) இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும்—

(அ) ஒரு பெருநகர்க் குற்றவியல் நடுவரின் அல்லது நீதித்துறை முதல் வகுப்புக் குற்றவியல் நடுவரின் நீதிமன்றத்திற்குக் கீழ் நிலையிலுள்ள நீதிமன்றம் எதுவும், இந்தச் சட்டத்தின்படியான குற்றச்செயல் எதனையும் விசாரணை செய்தல் ஆகாது;

(ஆ) நீதிமன்றம் எதுவும், இந்தச் சட்டத்தின்படியான குற்றச்செயல் எதனையும்—

(i) குற்றச்செயலாகும் அந்தப் பொருண்மைகளைத் தானே தெரிந்ததன் மீதோ காவல் துறை அறிக்கையின் மீதோ, அல்லது

(ii) அந்தக் குற்றச் செயலால் குறையுற்றவரால் அல்லது அத்தகையவரின் பெற்றோரால் அல்லது பிற உறவினரால் அல்லது ஏற்பளிக்கப்பட்ட நல்வாழ்வு நிறுவனம் அல்லது அமைப்பு எதனாலும் செய்யப்படும் ஒரு முறையீட்டின் மீதோ

தவிர, வழக்கில் ஏற்றுக்கொள்ளுதல் ஆகாது;

(இ) இந்தச் சட்டத்தின்படியான குற்றச் செயல் ஒன்றைப் பொறுத்து குற்றத்தீர்ப்பு அளிக்கப்பெற்ற எவரின்மீதும், ஒரு பெருநகர்க் குற்றவியல் நடுவர், அல்லது ஒரு நீதித் துறை முதல் வகுப்புக் குற்றவியல் நடுவர் இந்தச் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட தீர்ப்புத்தண்டனை எதனையும் விதிப்பது சட்டமுறையானது ஆகும்.

விளக்கம்—இந்த உட்பிரிவைப் பொறுத்தவரை, ''ஏற்பளிக்கப்பட்ட நல வாழ்வு நிறுவனம் அல்லது அமைப்பு'' என்பது, இதன்பொருட்டு மைய அல்லது மாநில அரசாங்கத்தினால் ஏற்பளிக்கப்பட்ட சமூக நலவாழ்வு நிறுவனம் அல்லது அமைப்பு என்று பொருள்படும்.

(2) குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973 (2/1974) இன் XXXVIஆம் அத்தியாயத்திலுள்ள எதுவும், இந்தச் சட்டத்தின்படி தண்டனைக் குற்ற குற்றச்செயல் எதற்கும் பொருந்துறாது.

(3) நிகழுறுகாலத்தில் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இந்தக் குற்றச்செயலினால் குறையுற்றவரால் அளிக்கப்பெறும் ஒரு வாக்குமூலம், அவரை, இந்தப் பிரிவின்படி ஒரு குற்றவழக்கு எதற்கும் உட்படுத்தாது.

குற்றச் செயல்கள் குறித்த சில நோக்கங்களுக்காக, பிடியாணை வேண்டாக் குற்றங்களாகவும் பிணையத்தில் விடத் தகாததாகவும் இசைந்து நிறுத்த முடியாதனவாகவும் இருத்தல்.

8. (1) குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973—

(அ) இந்தச் சட்டத்தின்படியான குற்றச்செயல்களைப் புலனாய்வு செய்யும் நோக்கங்களுக்காகவும், மற்றும்

(ஆ) (i) அந்தத் தொகுப்புச்சட்டத்தின் பிரிவு 42இல் சுட்டப்பட்டுள்ள பொருட்பாடுகளாகவும்,

(ii) ஒரு பிடியாணையின்றி அல்லது ஒரு குற்றவியல் நடுவரின் ஆணையின்றி ஒருவரைக் கைதுசெய்தல் குறித்ததாகவும். அல்லாத பிறபொருட்பாடுகளின் நோக்கங்களுக்காகவும் அவை பிடியாணை வேண்டாக் குற்றச்செயல்களாக இருந்தாற்போன்றே, அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பொருந்துறுதல் ஆகும்.

(2) இந்தச் சட்டத்தின்படியான குற்றச்செயல் ஒவ்வொன்றும், பிணையத்தில் விடத் தகாததாகவும், இசைந்து நிறுத்தமுடியாததாகவும் இருக்கும்.

குறித்த சில நேர்வுகளில் மெய்ப்பிக்கும் பொறுப்பு.

8அ. பிரிவு 3இன்படி மணக்கொடை எதனையும் ஏற்றுக்கொண்டதற்காக அல்லது ஏற்றுக்கொள்ள உடந்தையாக இருந்ததற்காக அல்லது பிரிவு 4இன்படி மணக்கொடை கோரியதற்காக எவர்மீதும் வழக்குத் தொடரப்படுமிடத்து, அந்தப் பிரிவுகளின்படி ஒரு குற்றச்செயலைத் தாம் செய்யவில்லை என்பதை மெய்ப்பிக்கும் பொறுப்பு அவரைச் சார்ந்தது ஆகும்.

மணக்கொடைத் தடுப்பு அலுவலர்கள்.

8ஆ. (1) மாநில அரசாங்கம், மணக்கொடைத் தடுப்பு அலுவலர்கள் எத்தனை பேர் தேவையெனக் கருதுகிறதோ அத்தனை பேரை அமர்த்தலாம்; மேலும், இந்தச் சட்டத்தின்படி, அவர்களுடைய அதிகார வரம்பினையும் அதிகாரங்களையும் அவர்கள் அதிகாரம் செலுத்தவேண்டிய பகுதிகளையும் குறித்துரைக்கலாம்.

(2) மணக்கொடைத் தடுப்பு அலுவலர் ஒவ்வொருவரும் பின்வரும் அதிகாரங்களைச் செலுத்துதலும் பதவிப் பணிகளைப் புரிதலும் வேண்டும் :—

(அ) இந்தச் சட்டத்தின் வகையங்கள் பின்பற்றப்படுமாறு கவனித்தல் ;

(ஆ) மணக்கொடை ஏற்றுக்கொள்வதை அல்லது ஏற்றுக்கொள்வதற்கு உடந்தையாக இருப்பதை அல்லது கோருவதை இயன்ற அளவுக்குத் தடுத்தல் ;

(இ) இந்தச் சட்டத்தின்படியான குற்றச்செயல்களைச் செய்கிறவர்களின் மீது குற்றவழக்குத் தொடர்வதற்குத் தேவைப்படும் சான்றினைச் சேகரித்தல்; மற்றும்

(ஈ) மாநில அரசாங்கத்தினால் அவருக்குக் குறித்தளிக்கப்படும் அல்லது இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதிகளில் குறித்துரைக்கப்படும் கூடுதல் பதவிப் பணிகளைப் புரிதல்.

(3) மாநில அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, அந்த அறிவிக்கையில் குறித்துரைக்கப்படும் ஒரு காவல் துறை அலுவலரின் அதிகாரங்களை மணக்கொடைத் தடுப்பு அலுவலருக்கு வழங்கலாம்; அவர், இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்படும் விதிகளினால் குறித்துரைக்கப்படும் வரம்புகளுக்கும் வரைக்கட்டுகளுக்கும் உட்பட்டு, அத்தகைய அதிகாரங்களைச் செலுத்திவருதல் வேண்டும்.

(4) மணக்கொடைத் தடுப்பு அலுவலர்கள், இந்தச் சட்டத்தின்படியான தங்கள் பதவிப்பணிகளைத் திறம்படப் புரிவதில் அவர்களுக்கு அறிவுரை கூறி, உதவுகிற நோக்கத்திற்காக, உட்பிரிவு (1)இன்படி அத்தகைய மணக்கொடைத் தடுப்பு அலுவலர் எந்தப் பகுதி பொறுத்து அதிகார வரம்பு செலுத்துகிறாரோ அந்தப் பகுதியிலிருந்து ஐவருக்கு மேற்படாத சமூகநல ஊழியர்களை (அவர்களில் குறைந்தது இருவர் பெண்களாக இருத்தல் வேண்டும்) உள்ளடக்கிய ஓர் அறிவுரைக் குழுமத்தை அமர்த்தலாம்.

**விதிகள் வகுப்பதற்கான அதிகாரம்.**

9. (1) மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக விதிகள் வகுக்கலாம்.

(2) மேலே கண்ட அதிகாரத்தின் பொதுப் பாங்கிற்குக் குந்தகமின்றி அத்தகைய விதிகள், குறிப்பாக—

(அ) பிரிவு 3 இன் உட்பிரிவு (2)இல் சுட்டப்பட்ட அன்பளிப்புகளின் பட்டியல் எதுவும் எந்தப்படிவத்தில், எந்த முறையில், யாரால் வைத்து வரப்படுதல் வேண்டும் என்பதற்காகவும், அதனுடன் தொடர்புடைய பிற பொருட்பாடுகள் அனைத்திற்காகவும்,

(ஆ) இந்தச் சட்டத்தை நிறைவுறுத்தும் வகையில் கொள்கையினையும் செயற்பாட்டினையும் சீராக இணையுறச்செய்வதற்காகவும்.

வகைசெய்யலாம்.

(3) இந்தப் பிரிவின்படி செய்யப்படும் விதி ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட பின்பு, கூடியவிரைவில் நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும் முப்பது நாட்கள்கொண்ட ஒரு மொத்தக் கால அளவுக்கு ஒரு கூட்டத்தொடராகவோ இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அடுத்தடுத்த இரண்டு கூட்டத் தொடர்களாகவோ அமர்வில் இருக்கையில் அதன்முன் வைக்கப்படுதல் வேண்டும்; மேலும் மேற்சொன்ன கூட்டத்தொடரை அல்லது அடுத்தடுத்த கூட்டத்தொடர்களை உடனடியாகத் தொடர்ந்துவரும் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு, அத்தகைய விதியில் மாற்றமைவு எதனையும் செய்வதற்கு இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின் அல்லது அந்த விதி செய்யப்படுதல் ஆகாது என்பதை இரண்டும் ஒத்துக்கொள்ளுமாயின், அதன்பின்பு, அந்த விதி அவ்வாறு மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் உடையது ஆகும் அல்லது நேர்வுக்கேற்ப, செல்திறம் இல்லாது போகும் ; எனினும், அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும் அந்த விதியின்படி முன்னதாகச் செய்யப்பட்ட செயல்களின் செல்லுந்தன்மைக்குக் குந்தகம் விளைவிப்பது இல்லை.

**விதிகள் வகுக்க மாநில அரசாங்கத்திற்குற்ற அதிகாரம்.**

10. (1) மாநில அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக விதிகள் வகுக்கலாம்.

(2) மேலே கண்ட அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றி, அத்தகைய விதிகள், குறிப்பாகப் பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்குமோ அவற்றுள் எதற்குமோ வகைசெய்யலாம்—

(அ) பிரிவு 8ஆ-வின் உட்பிரிவு (2) இன்படி மணக்கொடைத் தடுப்பு அலுவலர்கள் புரியவேண்டிய கூடுதல் பதவிப்பணிகள் ;

(ஆ) பிரிவு 8ஆ-வின் உட்பிரிவு (3) இன்படி ஒரு மணக்கொடைத் தடுப்பு அலுவலர் தமது பதவிப்பணிகளை எத்தகைய வரம்புகளுக்கும் வரைக்கட்டுகளுக்கும் உட்பட்டுப் புரியலாகுமோ அத்தகைய வரம்புகளும் வரைக்கட்டுகளும்.

(3) இந்தப் பிரிவின்படி மாநில அரசாங்கத்தினால் வகுக்கப்படும் விதி ஒவ்வொன்றும், அது வகுக்கப்பட்ட பின்பு, கூடியவிரைவில், மாநிலச் சட்டமன்றத்தின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்.